செ.வெ.எண்: 611/2016 நாள்: 08.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக இயன்முறை மருத்துவ தினத்தை முன்னிட்டு, அரசுதுறை அலுவலர்களுக்கு, இலவச இயன்முறை மருத்துவமுகாமினை இன்று (08.09.2016) குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக இயன்முறை மருத்துவ தினத்தை முன்னிட்டு, அரசுதுறை அலுவலர்களுக்கு, இயன்முறை மருத்துவ பெருமன்றம், குமரி மாவட்ட கிளை சார்பாக, ஏற்பாடுகள் செய்திருந்த இலவச இயன்முறை மருத்துவ முகாமினை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள லூயிலி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (08.09.2016) குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழக அரசின் நலத்திட்ட உதவிகள் உடனுக்குடன் தகுதியான நபர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக, பல்வேறு சூழ்நிலையில், சிறப்பாக பணியாற்றி கொண்டிருக்கும் அரசு அலுவலர்களுக்கு, பல்வேறு காரணங்களால் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அதில் குறிப்பாக கழுத்துவலி, மூட்டுவலி, முதுகுவலி, பக்கவாதம், முகவாதம், குதிகால்வாதம், தசைபிடிப்பு, நரம்பு தளர்ச்சி போன்ற பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டு, தங்களது பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இவற்றுக்கு ஏற்படும் நோயிலிருந்து பாதுகாக்கவும், முழு உடல் ஆரோக்கியம் பெறுவதற்காக, அரசு அலுவலர்களுக்கான இலவச உலக இயன்முறை மருத்துவமுகாம் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெற்றது. இதில் வருவாய்துறை, உள்ளாட்சிதுறை போன்ற பல்வேறு துறைகளை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களுக்கு தேவைப்படும் சிகிச்சை மற்றும் அறிவுரைகள் பெற்று பயனடையுமாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு. பொ. இராஜேந்திரன், இயன்முறை மருத்துவ பெருமன்றத்தின் இயக்குநர் மரு. சையதலி, செயலாளர் மரு. சேது, பொதுகுழு உறுப்பினர்கள் மரு. கலைச்செல்வன், மரு. மேரி விக்டா, மரு. விஜயசாந்தி, மரு. அனிதா, மரு. கிரிஷ், மரு. பாசில், மரு. ஆனந்த் உள்ளிட்ட மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.